செய்தி வெளியீடு எண்: 661 நாள்: 14.10.2007

# செய்தி வெளியீடு

## மாநில அரசின் விளக்கம்

சென்னை பூங்கா இரயில் நிலையத்திற்கு அருகேயுள்ள சென்னை மத்திய சிறைச்சாலையை சார்ந்த நிலத்தினை அரசு மெட்ரோ இரயில் திட்டத்திற்கு (Metro Rail Project) மாற்றுவதாக பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்திகள் வந்துள்ளன. இச் செய்தி இந்த நிலத்தை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப் படலாமென்ற தோற்றத்தை உருவாக்குகிறது. இந்த நிலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவே மேம்படுத்தப்படும் என்று இதன்மூலம் விளக்கம் அளிக்கப்படுகிறது. ஒரு வணிக வளாகக்கூடம், பலஅடுக்கு வாகன நிறுத்தம் மற்றும் பொதுமக்களுக்கான ஒரு பூங்கா போன்ற பொது பயன்பாடுகளையும் கருத்தில் கொண்டு ஒரு சாத்தியக்கூறு ஆய்வு தயாரிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அந்த சாத்தியக்கூறு ஆய்வு பெறப்பட்ட பின்னர், அந்த நிலத்தின் சரியான உபயோகம் பற்றி அரசு முடிவு எடுக்கும்.

டாக்டர் டி.வி. சோமநாதன்
அரசுச் செயலாளர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.